Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 96 | வெள்ளிக்கிழமை Friday | 06.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ரூ.34 ஆயிரம் கோடி மதிப்பிலான 15 தொழிலுக்கு முதலீடு திட்டம்

## முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நடந்த தமிழக அமைச்சரவை ஒப்புதல்



தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 15 புதிய முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் அடுத்த சில வாரங்களில் தொடங்கவுள்ள நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சரவை கூட்டத்திற்க்கு பிறகு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "அமைச்சரவை கூட்டத்தில் 15 புதிய முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் மூலம் 34,237 கோடி ரூபாய் முதலீடுகளும், 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்" என்றார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, "மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு உதவும் விதமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த முதலீடுகள் வரவுள்ளன. வரும் 12 ஆம் தேதி நடைபெறவுள்ள முதலீடுகள் தொடர்பான மாநாட்டில் முக்கிய அறிவிப்புகளும், தொடர்ந்து 13 ஆம் தேதி மிகப் பெரிய திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட உள்ளது" என்றார்.

மேலும் தொழிற்துறை அமைச்சர் டி. ஆர்.பி.ராஜா பேசுகையில், "இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில், மின்னணுவியல் நிறுவனம், வாகனம் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றுக்கான முதலீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம் மூலம் சுமார் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

மேலும், ஏற்கனவே செயல்பாட்டில் இருக்கும் நிறுவனங்களை விரிவாக்கம் செய்வதற்கும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பரவலாக்கும்வளர்ச்சி மூலம் நாட்டிலேயே தமிழகம் முதல் இடத்தில் இருப்பதை தக்க வைக்கும் வகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். அந்த வகையில் ராணிப்பேட்டையில் வரும் 9 ஆம் தேதி டாடா நிறுவனத்தின் ஜாகுவார் - லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலையை முதல்வர் துவக்கி வைக்க உள்ளார் " என்றார். இடைக்கால நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல்

இதனிடையே நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் இடைக்கால நிதி நிலை அறிக்கைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

# “காங்கிரஸ் செய்த தவறுகளை திருத்துவதிலேயே அதிக நேரம் செலவிடுகிறோம்” மாநிலங்களவையில் பிரதமர் மோடி பேச்சு!



திமுக, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரம் தாழ்ந்து செயல்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி மாநிலங்களவையில் தாக்கிப் பேசினார்.

மக்களவையில் எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில் பிரதமர் மோடியின் பதிலுரை இல்லாமலேயே குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் (பிப்.5) காலை நிறைவேற்றப்பட்டது.

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் முன்னாள் ராணுவத் தளபதி நரவணேவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சீனஎல்லைப்பிரச்னை குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்ராகுல்காந்தி பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும்கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பிரதமர் மோடி நேற்று மாலை 5 மணிக்கு பதிலுரை அளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எதிர்க்கட்சிகளின் கடும் அமளி காரணமாக பிரதமர் மோடியின் பதிலுரை நேற்று ரத்து செய்யப்பட்டது.

தொடர்ந்து இன்று காலை நாடாளுமன்றம் தொடங்கியதும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டு பதாகைகளுடன் முழக்கங்கள் எழுப்பியதால் பரபரப்பான சூழல் நிலவியது. இதனிடையே, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் மாலை 5 மணிக்கு பிரதமர் மோடி பதிலுரை ஆற்றினார். அவர் பேச ஆரம்பித்ததும் மாநிலங்களவை எம்பிக்கள் அனைவரும் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்கு மாநிலங்களவையில் பிரதமர் மோடி பதில் அளித்து வரும் நிலையில், அவரது உரையை தொடங்கியதும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையில் தொடர் முழக்கமிட்டு கடும் அமளியில் ஈடுபட்டனர்.

அவர் உரையாற்றும்போது, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தியை பேச அனுமதிக்க வேண்டும் என்றும் மாநிலங்களவை எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

அமளிக்கு மத்தியில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை குரல் வாக்கெடுப்பு நடத்தி அவைத் தலைவர் ஓம் பிர்லா நிறைவேற்றியுள்ளார். தொடர்ந்து பகல் 2 மணிவரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. இதனிடையே, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் மாலை 5 மணிக்கு பிரதமர் மோடி பதிலுரை ஆற்றினார். அவர் பேச ஆரம்பித்ததும் மாநிலங்களவை எம்பிக்கள் அனைவரும் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.

அவர்களை "அமைதியாக இருங்கள், என்னைப் பேசவிடுங்கள்.." என கோரிக்கை வைத்துவிட்டு பிரதமர் மோடி தொடர்ந்து உரையாற்றுகையில், "பழங்குடியினரின் வேலைகள் மற்றும் நிலங்களை ஆக்கிரமிக்கும் ஊடுருவல்காரர்களைதிரிணமூல் காங்கிரஸ் அரசு பாதுகாத்து வருகிறது.

வாக்குவங்கி அரசியலில் ஈடுபடுவோர் நாட்டின் வளர்ச்சியைப் பற்றி யோசிக்கமாட்டார்கள். காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் செய்யும் தவறுகளை சரிசெய்வதிலேயே நேரம் போய்விடுகிறது; எதிர்க்கட்சிகள் பதில் சொல்லியாக வேண்டும்

காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள் பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து தங்கள் கஜானாவை மட்டுமே நிரப்பிக் கொண்டன. ஆனால், மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

வங்கித் துறையில் எதிர்காலம் கருதியே புத்திசாலித்தனமான சீர்திருத்தங்களை மேற்கொண்டு இருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சியில் வாராக்கடன்கள் அதிகமாக இருந்தன; தற்போது வங்கிகள் சிறப்பாக செயல்படுகின்றன.

வங்கிகளின்வாராக்கடன் 1 சதவிகிதக்கும் கீழ் குறைந்திருக்கிறது. வங்கிகளின் லாபம் புதிய உச்சத்தைஎட்டியிருக்கிறது. ஏழைகளுக்கு ரூ.30 லட்சம் கோடி முத்ரா கடன் வழங்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

# “தோல்வி பயத்தில் தினமும் தேர்தல் அறிக்கை வெளியிடுகிறது அதிமுக”

## செங்கோட்டையன் விமர்சனம்



அதிமுகவுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. தோல்வி பயத்தில் தினமும் தேர்தல் அறிக்கை வெளியிடுகிறார்கள்" என தவெக நிர்வாகி செங்கோட்டையன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, " தமிழக மக்கள் தெளிவாக முடிவு செய்துவிட்டார்கள். இரண்டு இயக்கங்களும் இந்த நாட்டை ஆள வேண்டுமா என மக்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். பல கோடி வருவாயை இழந்தபோதிலும், மக்கள் பணியாற்ற வந்திருக்கிறார் விஜய். தவெக தலைவர்விஜய்யைபார்த்து, எல்லோருக்கும்பயம் வந்துவிட்டது. அதனால் தான் அனைவரும் அவர் மீது விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

நேற்று பல்வேறு நிகழ்சிகளில் பங்கேற்றேன். அப்போது, குழந்தைகள் தங்களது பெற்றோரை தவெகவுக்கு வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்துவதாக சொன்னார்கள். 2026 சட்டப்பேரவை தேர்தலில் தவெக தலைவர்விஜய்முதல்வராக வருவார்.

234 தொகுதிகளிலும் தவெக வெற்றி பெறும். புதிதாகவாக்களிக்க இருப்பவர்கள் விஜய் நாட்டை ஆள வேண்டும் என நினைக்கி றார்கள். இது தான் அவர்களின் ஒருமித்த கருத்தாக இருக்கிறது. அதிமுகவுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. தோல்வி பயத்தில் தினமும் தேர்தல் அறிக்கை வெளியிடுகிறார்கள். தேர்தல் அறிக்கை என்பது மொத்தமாக வெளியிடப்பட வேண்டியது. தினமும் சிந்தித்து சிந்தித்து தேர்தல் அறிக்கைவெளியிடுகிறார்கள் என்றால் எவ்வளவு தோல்வி பயம் இருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் 05.02.2026 சென்னை கட்சியின் தலைமை அலுவலகமான திருவள்ளுவர் இல்லத்தில் முத்தமிழன் வேல்முருகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சட்டமன்ற தொகுதி தலைவர் செயலாளர் ஆலோசனை கூட்டத்தில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி சார்பாக கலந்து கொண்டு கூட்டத்தில் எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் குறித்தும் , தொகுதி நிலவரம் குறித்தும் கூட்டணி கட்சியின் நிலைப்பாடு குறித்தும் ஆலோசனை நடைபெற்றது. இந்த நிகழ்வில்தொகுதிதலைவர்JK@DR.M.ஜெயகாந்தன்மற்றும்தொகுதிசெயலாளர்ஆலயம் ரா காகார்த்திகேயன் கலந்து கொண்டனர்.



# மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் பல்வேறு நலத்திட்டங்களை தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு வழங்கினார்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மானாமதுரை அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பயின்று வரும் 90 மாணவமாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள், மடிக்கணினி, காலணிகள், தொழிற்பயிற்சி புத்தகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி கருவிகளை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவுதினத்தை முன்னிட்டு, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் மடப்புரம் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலில் சமபந்தி விருந்தினை சட்டமன்ற உறுப்பினர் தொடங்கி வைத்து பக்தர்களுக்கு சேலைகள் வழங்கினார்.

தொடர்ச்சியாக சாமானிய மக்களின் மனநிலையைபுரிந்துகொண்டு, அவர்களின் உடல் நிலையை சீராக வைத்துக்கொல்லும்பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாநிலம் முழுவதும் துவங்கி வைக்கப்பட்ட "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமின்" தொடர்ச்சியாக, திருப்புவனம் பேரூராட்சியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் கலந்து கொண்டு முகாமினை துவங்கி வைத்து பயனாளி பெருமக்களுக்கு மருத்துவ பெட்டகங்களை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் வழங்கினார்.

இந்நிகழ்வில் மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராஜாமணி,திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு.எம்.ஏ. கடம்பசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் டி.ஆர்.சேகர், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் முருகன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி, கிழங்காட்டூர் கிளைச் செயலாளர் சடையப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கல்லூரி முதல்வர் சேகர், உதவி பயிற்சி அலுவலர் வினோத் ராஜ்குமார், மாணவ மாணவியர்கள், ஆசிரிய பெருமக்கள், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 6 மாதமாக பூட்டிய நிலையில் உள்ள ஆரம்ப துணை சுகாதார நிலையம் திறக்கப்படுமா?




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் ம. குன்னத்தூர் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆரம்பதுணைசுகாதாரநிலையம்கட்டிமுடிக்கப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் இதுவரைக்கும் மக்கள் பயன்பாட்டுக்கு வராமல் கதவு பூட்டப்பட்டு நிலையில் இருப்பதினால் விரைவில் தமிழக அரசு உடனடியாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றுபுரட்சிபாரதம்கட்சியின்கள்ளக்குறிச்சிகிழக்கு மாவட்ட செயலாளர் K.K. ஏழுமலை கோரிக்கை

# அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மாணவர்களுக்கான பாலின உளவியல் குறித்த கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியருக்கான பாலின உளவியல் குறித்த கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி, கல்லூரியின் கணினிப் பயன்பாட்டியல் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் கல்லூரி யின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமைவகித்தார்.வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம் வரவேற்புரை ஆற்றினார்.

கல்லூரியின்தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தாவரவியல் துறையின் முன்னாள் மாணவியும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் வழக்கறிஞருமான உமாபதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ மாணவியரிடையே பாலின உளவியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, பெண்களுக்கு இருக்கும் சட்டப் பாதுகாப்பு குறித்து விளக்கிக் கூறி அதைப் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார் . கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் சந்திரசேகரன் நன்றி கூறினார். இதில் பேராசிரியர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர்.

# அச்சிறுப்பாக்கம் அருகே விசிக நிர்வாகி இல்ல விழா அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் வாழ்த்து

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அடுத்த ஆனைகுன்றம் கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி சுரேஷ்--கீதா தம்பதியரின் மகள் தியாஷினி பூப்புனித நீராட்டு விழா விமர்சையாக நடைபெற்றது. அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட ஊர் பொதுமக்கள் உறவினர்கள் பூமாலை இனிப்புகள் புதிய புத்தாடை உடன் சீர்வரிசை செய்து குழந்தையின் நெற்றியில் வெற்றி திலகம் இட்டு வாழ்த்திய அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது



# நாகரசம்பட்டி அருகே கல்லூரி வாகனம் மோதி இராணுவ வீரரின் மனைவி உயிரிழப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த காட்டுக்கொள்ளை கிராமத்தை சேர்ந்தவர் சத்தியகுமார் (30). இராணுவ வீரரான இவர் விடுப்பில் வீட்டிற்கு வந்த நிலையில் நேற்று வேலம்பட்டியில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பும்போது பின்னே வந்த தனியார் கல்லூரி பேருந்து இவருடைய இரு சக்கர வாகனத்தில் மோதியது. இதில் இரு சக்கர வாகனத்தி'ல் பயணித்த இவருடைய மனைவி திவ்யா (29), இரு மகன்கள் ஆகிய நான்கு பேரும் தூக்கி வீசப்பட்டனர். இதில் நான்கு பேரும் பலத்த காயமடைந்தனர். நான்கு பேரையும் மீட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலைதிவ்யா உயிரிழந்தார்.சம்பவம் குறித்து நாகரசம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோவிலில் நாளை நடைபெற உள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நடைபெற்ற யாகசாலை பூஜையில் கலந்துகொண்டு பெருமாளை தரிசனம் செய்தார். இந்நிகழ்வில் இலங்கை முன்னாள் அமைச்சர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் திரு. செந்தில்தொண்டமான் அவர்கள், அஇஅதிமுக முன்னாள் அமைச்சர் மற்றும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், மேலும் சிவகங்கை மாவட்டம் மற்றும் மாநில நிர்வாகிகள் இணைந்து கலந்து கொண்டு பெருமாளை தரிசனம் செய்தனர்.

# உலகிலேயே முதல் முறையாக ரூ.77 லட்சம் கோடி சொத்து மதிப்பை எட்டிய எலான் மஸ்க்!



வாஷிங்டன்: அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்குக்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் செயற்கை நுண் ணறிவு நிறுவனமா ன எக்ஸ்ஏஐ ஆகிய வை சமீப த்தில் இணைந் த ன. இந்த வரலாற்று ச் சிறப்பு மிக்க இணை ப் புக்குப் பிறகு, எலன் ம ஸ்க் 800 பில் லிய ன் டாலர் சொத்து ம தி ப் பைத் தாண்டிய வர லா ற்றின் முதல் நபர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

ஃபோர்ப்ஸ் அறிக்கையி ன் படி, இந்த இணைப்பின் மூல ம் உருவான புதிய நிறு வனத்தின் மதிப்பு 1.25 டி ரில்லி யன் டாலர் ஆ கும். இதன் மூலம் மஸ்க்கின் தனிப்பட்ட சொத்து மதிப்பு 84 பில்லியன் டாலர் உயர்ந்து, தற்போது பிரமிக்க வைக்கும் 852 பில்லியன் டாலராக (ரூ.77 லட்சம் கோடி) உள்ளது.

# பெரியவடவாடி டாக்டர் ராமதாசு கல்லூரியில் மாபெரும் ரத்ததான முகாம்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் ரோட்டரி சங்கம் சார்பில் பெரியவடவாடி டாக்டர் ராமதாசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கடலூர் ரோட்டரி இரத்த வங்கி ஆகியவை இணைந்து 289-வது திட்டமாக மாபெரும் குருதிக்கொடை முகாமை 04.02.2026 புதன்கிழமை கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடத்தினர்.



இந்த விழாவிற்கு விருத்தாசலம் ரோட்டரி சங்கத்தலைவர்அன்புக்குமரன் தலைமை தாங்கினார். முகாமைத் தொடங்கி வைத்து,மண்டலம்-9-ன் உதவி ஆளுநர்அசோக்குமார்திட்டத் தலைவராகச்செயல்பட்டார். கல்லூரி முதல்வர் முனைவர் சிவசங்கரன் முன்னிலை வகிக்க, திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி முனைவர் பரமசிவம் திட்ட விளக்க உரையாற்றினார்.

இந்நிகழ்வில், விருத்தாசலம் சந்திரா மருத்துவமனை மருத்துவர் கோவிந்தசாமி தலைமை விருந்தினராகவும், கடலூர் சுரேந்திரா மருத்துவமனை நிறுவனர் ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்டத் தலைவர் ஜாகீர் உசேன் மற்றும் கல்லூரி இயக்குனர் செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முகாமில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். முடிவில் விருத்தாசலம் ரோட்டரி சங்கச் செயலாளர் பிரபாகர் நன்றியுரை வழங்கினார்.

# கோவை கொடிசியா வளாகத்தில் பில்ட் இன்டெக் கண்காட்சி நடைபெற உள்ளது

கோவை கொடிசியா வளாகத்தில் பில்ட் இன்டெக்கண்காட்சி,பிப்ரவரி 6 ந்தேதி துவங்கி நான்கு நாட்கள் நடைபெற உள்ள இதில்,கட்டுமான துறை சார்ந்த முன்னனி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையினர் பங்கேற்க உள்ளதாக பில்டு இந்தக் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

தென்னிந்தியாவின் மாபெரும் கண்காட்சிகளில் ஒன்றாக கோவை கொடிசியா வளாகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பில்டு இன்டெக் கண்காட்சி நடைபெற்று வருகிறது..

இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு வரும் பிப்ரவரி 6 ந்தேதி துவங்கி 9 ந்தேதிவரைபில்டுஇண்டெக் 2026 கண்காட்சி நடைபெற உள்ளது.. இது தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பு கோவை கொடிசியா அலுவலகத்தில் நடைபெற்றது...

இதில்பில்டு இண்டெக் 2026 கண்காட்சியின் தலைவர் ஞான வள்ளல் மற்றும் கொடிசியா தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசினர் அப்பொழுது அவர் கூறியதாவது.. கட்டிடக் கலை, கட்டுமானம், பொறியியல், கட்டுமானப் பொருட்கள் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்கான கண்காட்சியாக 15 வது பதிப்பாக நடைபெறும் பில்டு இண்டெக் கண்காட்சியில், கட்டுமானத் துறை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் காட்சி படுத்த இருப்பதாக தெரிவித்தனர்...

குறிப்பாக இந்த கண்காட்சியில் நவீன கட்டுமானப் பொருட்கள், சேவைகள், மற்றும் கட்டுமான இயந்திர தொழில்நுட்பங்கள்,கட்டுமான முறைகள் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் குறித்த விவரங்கள் இடம்பெற உள்ளன.



கட்டுமானத் துறை சார்ந்த விவரங்களை பகிர்ந்து கொள்வதற்கும், வணிகத் தொடர்புகளை உருவாக்கி கொள்வதற்கும் பில்டு இன்டெக் 2026 கண்காட்சி ஒரு மிகச் சிறந்த தளமாகும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

சுமார் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் மூன்று அரங்குகளில் நடைபெறும் இதில், 250க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைய இருப்பதாகவும்,

நாடு முழுவதும் இருந்து சுமார் 40,000பேர் வரை பார்வையாளர்களை எதிர்பார்ப்பதாக தெரிவித்தனர்..

மேலும் கட்டுமான துறையில் உள்ள நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் துறை சார்ந்த எதிர் கால வளர்ச்சிகள் குறித்து சிறப்பு கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல் அமர்வுகள் இருப்பதாகவும் கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்..

இந்த சந்திப்பின் போது பில்டு இண்டெக் துணை தலைவர் பாபு,கொடிசியா செயலாளர் யுவராஜ் ஆகியோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளர் சூ.க.ஆதவன் மாநில மகளிர் விடுதலை இயக்க மாநில செயலாளர் மு.தமிழினி நியமனம்

### வி.சி.க. தலைவர் திருமாவளவன் அறிவிப்பு

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளராக செய்யூர் அடுத்த சூனாம்பேடு ஊராட்சியை சார்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் சூ,க, ஆதவன் மண்டல செயலாளராகவும் மகளிர் விடுதலை இயக்கத்தின் மாநில செயலாளராக சித்தாமூர் அடுத்த சித்தார்காடு ஊராட்சியை சார்ந்த முன்னாள் மாவட்ட செயலாளர் ஒன்றிய கவுன்சிலர் மு, தமிழினி அவர்களையும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அவர்கள் நியமனம் செய்துள்ளார் இவர்களுக்கு கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள் தொலைபேசி வாயிலாக வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

## புளியம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி ஆசிரியர் சர்ச்சைக்குரிய பேச்சு – காவி நிறத்தை பற்றி பேசியதால் பிஜேபியினர் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் மனு



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள புளியம்பட்டி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி வரும் கணத ஆசிரியர் குமார், நேற்று 03.02.2026 பள்ளியில் நடைபெற்ற இலவச சைக்கில் வழங்கும் விழாவில், சர்ச்சைக்குரிய வகையில்பேசினார்.

திமுகவை சேர்ந்த பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதிழகன் பங்கேற்ற இலவச சைக்கில் வழங்கும் விழாவில், அரசுக்கும் உங்களுக்கும் பிடிக்காத நிறம் காவி. அந்த நிறத்தில் உள்ள மூன்று பள்ளி கட்டிடங்களின் வண்ணத்தை மாற்றிட வேண்டும். புதிய வண்ணத்தில் மாற்ற நிதி வழங்கிட வேண்டும் என பேசினார்.இந்நிகழ்வில்

பிஜேபி கட்சியை நேரடியாக விமர்சித்த காரணத்தால், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் இன்று 04.02.2026 புகார் அளிக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நாளை 05.02.2026 அன்று போச்சம்பள்ளி 4 வழி சாலையில் என்டிஏ கூட்டணி சார்பில் மாபெறும் ஆர்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அதிமுக ஒன்றிய செயலாளர் திருமால், பாமக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பழனிவேல் உள்ளிட்ட என்டிஏ கூட்டணியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் கந்தசாமி செய்திக்குறிப்பு



இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026–ன் ஒருபகுதியாக வரைவு வாக்காளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்மற்றும்மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

இதில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 08 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள தரவுகளில் உள்ள முரண்பாடுகளை சரிசெய்வது தொடர்பாகவும், வாக்குச் சாவடி மறுசீரமைத்தல் தொடர்பாகவும், படிவங்கள் 6,7, 8 (சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம்) தொடர்பாகவும் கூட்டம் நடைபெற்றது. மேலும், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2 –ஐ நியமிக்க வேண்டும் எனவும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.



தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 20252026ன் கீழ் தளக்காவயல், பரம்பக்குடி, நகரமங்கலம், பின்னலாங்கோட்டை, திருவேகம்பத்தூர், பொன்னக்கரை, மேக்காரைக்குடி ஆகிய இடங்களில் Rs.42.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பயணியர் நிழற்குடைகளையும் (பஸ்ஸ்டாப்) திடக்கோட்டையில் Rs.12.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு மற்றும் திருமணவயல் ஊராட்சி கோட்டூர் கிராமத்தில் Rs.6.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணற்றையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.மாங்குடி அவர்கள் திறந்து வைத்தார்கள். நிகழ்ச்சியில் தி.மு.க ஒன்றிய செயலாளர்கள் பூபாலசிங்கம், நாகனி ரவி சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர்கள் அப்பச்சி சபாபதி, பூமிநாதன், மீரா உசேன் காங்கிரஸ் வட்டார தலைவர்கள் ஜமால், புகழேந்தி, மனோகரன் முத்துக்குமார், உள்ளிட்ட தி.மு.ககாங்கிரஸ் கூட்டணிக்கட்சியினர் மற்றும் கிராம பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பில் உலக புற்றுநோய் தினம் 2026 அனுசரிக்கப்பட்டது

### சமூக வலைத்தளம் மூலம் புற்றுநோய் விழிப்புணர்வு இயக்கம் மற்றும் இலவச புரோஸ்டேட் புற்றுநோய் பரிசோதனை துவங்கப்பட்டது




கோவை ஆவாரம்பாளையம்பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணாமருத்துவமனையில் உலகபுற்றுநோய் தினத்தை முன்னிட்டு, சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் ஒரு மாத கால இலவச புரோஸ்டேட் புற்றுநோய் பரிசோதனைத் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கோயம்புத்தூர் சரக காவல் துணை தலைவர் டாக்டர் வி. சசி மோகன், ஐ.பி.எஸ். கலந்து கொண்டு,சமூகவலைத்தளம் மூலம் புற்றுநோய் விழிப்புணர்வு இயக்கத்தையும்,இலவசபுரோஸ்டேட் புற்றுநோய் பரிசோதனை திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். முதலாவதாக நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் பி.குகன் வரவேற்றார். உலகம் முழுவதும் பிப்ரவரி 4–ஆம் தேதி உலக புற்றுநோய் தினமாக கடைபிடிக்கப்படுவதாகவும், புற்றுநோயின் கடுமையானதாக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது, தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது, ஆரம்ப கட்டத்தில் கண்டறிவது, சிகிச்சையை மேம்படுத்துவைத்து மற்றும் சமூகத் தடைகளை நீக்குவது போன்றவை இதன் முக்கிய நோக்கங்களாகும் எனத் தெரிவித்தார்.

2026–ஆம் ஆண்டு புற்றுநோய்க்கு எதிரான கருப்பொருளாக, தனித்துவத்தால் ஒன்றிணைவோம் என்ற கருத்தை கொண்டு, மனிதநேய அடிப்படையிலான புற்றுநோய் பராமரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன்,ஒவ்வொருவரின் புற்றுநோய் அனுபவமும் தனித்துவமானது என்பதை உணர்த்துகிறது.

தொடர்ந்து 20–ஆவது ஆண்டாகபுற்றுநோய்க்கு எதிராக முன்னெடுக்கப்படும் முயற்சியாக இந்த விழிப்புணர்வு அமைகின்றது என்றார்.

நிகழ்ச்சியில் எஸ்.என். ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் , ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பார்கவி, எஸ்.என். ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் இணைநிர்வாக அறங்காவலர் நரேந்திரன், தலைமை செயல் அதிகாரி சி.வி.ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டி. மகேஷ்குமார் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர்.எஸ். ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர்.எஸ்.அழகப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## ஈரோடுமாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் சிறிய அளவிலான பால் பண்ணை திட்டத்தின் கீழ் 45 விவசாய பயனாளிகளுக்கு 90 கறவை மாடுகள் கொள்முதல் செய்திட ரூ.67.5 லட்சம் மதிப்பீட்டிலான வங்கி கடனுதவியினை வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (05.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் சிறிய அளவிலான பால் பண்ணை திட்டத்தின் கீழ் 45 விவசாய பயனாளிகளுக்கு 90 கறவை மாடுகள் கொள்முதல் செய்திட ரூ.67.5 லட்சம் மதிப்பீட்டிலான வங்கி கடனுதவியினை வழங்கினார்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியத்திற்கு சிறு பால் பண்ணைகள் அமைக்க 250 குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி மாவட்டத்தில் தகுதியுள்ள 365 நபர்களுக்கு தலா 3.00 லட்சம் வீதம் வங்கிகடன்வழங்கபரிந்துரை செய்யப்பட்டு, தற்போது 45 விவசாய பயனாளிகளுக்கு 90 கறவை மாடுகள் கொள்முதல் செய்திட முதற்கட்டமாக 67.5 லட்சம் வங்கி கடன் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தகுதியுள்ள நபர்களுக்கு படி படியாக கடன் வழங்கி கறவை மாடுகள் கொள்முதல் செய்து வழங்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்/பொதுமேலாளர் மு.அமிர்தலிங்கம், துணைப்பதிவாளர் (பால்வளம்) அ.சையத் ஏஜாஸ், உதவி பொது மேலாளர் (பால் கொள்முதல்) டாக்டர்.மு.பரமசிவம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி 2 (Group II/IIA) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு 8 ந் தேதி நடக்கிறது

### மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால்ஒருங்கிணைந்தகுடிமைப்பணிகள் தொகுதி –2 (Group II/II–A) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) எதிர்வரும் 08.02.2026 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் நடைபெறுகிறது.ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால்ஒருங்கிணைந்தகுடிமைப்பணி கள் தொகுதி 2 (Group II/II–A) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) எதிர்வரும் 08.02.2026 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் நடைபெறுகிறது. மேற்படி தேர்வினை ஈரோடு மாவட்டத்தில் 385 தேர்வர்கள் எழுத உள்ளனர். ஈரோடு வட்டத்தில் உள்ள 02 தேர்வுக் கூடங்களில் எதிர்வரும் 08.02.2026 அன்று காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரையிலும் மற்றும் பிற்பகல் 2.30 மணி முதல் 5.30 மணி வரையிலும் இத்தேர்வு நடைபெறவுள்ளது.

தேர்வு நாளன்று காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை மற்றும் மதியம் 1.30 மணி முதல் 02.00 மணி வரை தேர்வுக் கூடத்திற்குள் தேர்வர்கள் அனுமதிக்கப்படுவர். முற்பகல் 9.00 மணிக்கு மற்றும் பிற்பகல் 2.00 மணிக்கு தேர்வுக்கூட நுழைவாயில் மூடப்படும். அதற்கு மேல் வருகை புரியும் தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே, தேர்வு எழுதும் தேர்வர்கள் சரியான நேரத்திற்குள் தேர்வுக்கூடத்திற்கு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும்,தேர்வுக்கூடங்களில் முறைகேடு கள் ஏதும் நிகழா வண்ணம் இருக்க பறக்கும்படை அலுவலர்நியமிக்கப்பட்டுள்ளனர்.

## விசிக மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன், தோப்பு வெங்கடாசலத்திற்கு சால்வை அணிவித்து மரியாதை

தமிழ்நாட்டில் ஆளும் கட்சியான திமுக–வின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சந்திப்பாக அமைந்தது. அப்போது, மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறித்துச் சுருக்கமாக ஆலோ–



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் தனது களப்பணிகளைத் தீவிரப்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசியல் செயல்பாடுகள் விறுவிறுப்படைந்துள்ளன.


மரியாதை நிமித்தமான சந்திப்பு

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கும் வி.விஜய பாலன்,தமிழ்நாடு முன்னாள் அமைச்சரும், திமுக ஈரோடு மத்திய மாவட்டச் செயலாளருமான தோப்பு என்.டி.வெங்கடாசலத்தை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு ஒரு மரியாதை நிமித்தமான சிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

விசிகமாவட்டச்செயலாளர் வி.விஜயபாலன், தோப்பு வெங்கடாசலத்திற்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார். அவரிடம் தனது அரசியல் செயல்பாடுகளுக்காக வாழ்த்துகளைப் பெற்றுக்கொண்டார். வரவிருக்கும் அரசியல் நிகழ்வுகளை எதிர்கொள்ளும் வகையில், திமுக மற்றும் விசிக ஆகிய இரு கட்சிகளுக்கும் இடையே அடிமட்ட அளவில் நிலவும் இணக்கமான போக்கை இந்தச் சந்திப்பு உறுதிப்படுத்துவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின் போது இரு கட்சிகளையும் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு அடுத்த ஆனைக்கால்பாளையத்தில் உள்ள மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் காவல்துறையினருக்கு வருடாந்திர நினைவூட்டல் கூட்டு கவாத்து பயிற்சி நேற்று நடைபெற்றது. இதற்கு ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமை வகித்தார். பின்னர் காவல்துறையினரின் பயிற்சி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு ஆய்வு செய்தார்.

## கீழக்கோட்டையில் தேசிய வானிலை ஆய்வாளர் தினம்



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தேசிய வானிலை ஆய்வாளர் தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்து இத்தினத்தை குறித்து மாணவர்களுடன் உரையாற்றினார். 1744 ஆம் ஆண்டு இதே நாளில் பிறந்த ஜான் ஜெ.ஃப்ரிஸின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

விஞ்ஞானியும் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் ஜெ.ஃப்ரிஅமெரிக்காவின் முதல் வானிலை பார்வையாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார். அவர் 1774 முதல் 1816 வரை வானிலை பதிவுகளை வைத்திருந்த முன்னோடி எனவும் தேசிய வானிலை ஆய்வாளர்கள் தினத்தில் வானிலை முன்னறிவிப்பை அறிவது பல வழிகளில் நமக்கு மதிப்புமிக்கது. வரவிருக்கும் நாட்களுக்கான நமது செயல்பாடுகளை திட்டமிடுவதற்கு நாம் அடிக்கடி வானிலை முன்னறிவிப்பை பார்க்கிறோம்.அது நாம் என்ன செய்கிறோம். எப்படி உடை அணிகிறோம். எங்குசெல்கிறோம் அல்லது நாம் செல்கிறோமா இல்லையா என்பதை பாதிக்கிறது. வரவிருக்கும் புயல்கள் சூறாவளி அல்லது சூறாவளிகளுக்குதயாராக இருப்பது உயிர்களை காப்பாற்றுகிறது. எனவே உங்கள் உள்ளூர் வானிலை நிபுணருக்கு நன்றி சொல்லுங்கள். சமீபத்திய புயல்கள் குறித்து உங்களுக்கு தெரிவிக்க நீங்கள் செய்திகளில் தொடர்பு கொள்ளும் நபராக இருக்கலாம் அல்லது தேசிய வானிலை சேவைக்கு அறிக்கை அளிக்கும் நிபுணர்களாகவும் இருக்கலாம். அவர்களின் எச்சரிக்கைகள் நம்மை மேலும் உடனடியாக ஆபத்துக்கள் குறித்து எச்சரிக்கின்றன.வானிலைமாற்றங்கள் பெரும்பாலும் நம் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்றன. எனவே அவர்களின் அர்ப்பணிப்பு மதிப்புமிக்கது. வானிலை அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் முடிந்தவரைதுல்லியமான முன்னறிவிப்பை நீங்கள் எவ்வளவு பாராட்டுகிறீர்கள் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் சிறப்பாக செயல்படும் வானிலை நிபுணருக்கு பாராட்டு தெரிவிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம் என்றார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார்.

## கூட்டணி குறித்து விரைவில் அறிவிப்பேன்
## புதிய தமிழகம் கட்சித்தலைவர் டாக்டர்.கிருஷ்ணசாமி பேட்டி



தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். மதுக் கொடுமை இல்லாத, கனிமவளக் கொள்ளை இல்லாத, அரசு வேலைகளில் ஊழலற்ற நேர்மையான நிர்வாகமே எங்களது கொள்கை என்று புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது: ஜனவரி 7–ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற கட்சியின் பிரம்மாண்ட மாநாட்டுத் தீர்மானங்களைகிராமங்கள்தோறும் கொண்டு செல்லப்படும். தொடர்ந்து தென்காசி, சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் 11–ஆம் தேதி வரை நடைபெற ஆலோசனைக் கூட்டம் உள்ளது.

தற்போதைய அரசியல் சூழலில் கூட்டணி என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அதற்கான பேச்சுவார்த்தைகள் வலுவாக நடைபெற்று வருகின்றன.வரும் தேர்தலில் புதிய தமிழகம் கட்சி சட்டமன்றத்திலும், ஆட்சி அதிகாரத்திலும் அங்கமாக இருக்கும்.

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் பகுதியைச்சேர்ந்த இளைஞர்கள் உட்பட 5 தமிழர்கள் ஆப்பிரிக்காவின் மாலி (Mali) நாட்டில் வேலைக்குச் சென்று, தற்போது தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. அவர்களை உடனடியாக மீட்க மத்திய மற்றும் மாநில அரசுகள் தூதரக ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் கனிமவளக் கொள்ளை தொடர்கதையாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், வல்லநாடு விஏஓ படுகொலை மற்றும் கனிமவளக் கொள்ளையைத் தடுத்த அதிகாரிகள், செய்தியாளர்கள் மீதான தாக்குதல்கள் கடும் கண்டனத்திற்குரியது. குவாரி உரிமையாளராக உள்ள ஆளுங்கட்சி எம்.எல்.ஏ பழனி மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.ஊடகவியலாளர்கள் மீதான கொலைவெறித் தாக்குதலை ஒவ்வொரு செய்தியாளரும் தங்களுக்கு நேர்ந்ததாகக் கருதி குரல் கொடுக்க வேண்டும்.

மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். ஆனால் அது இயந்திரத்தனமான மாற்றமாக இருக்கக்கூடாது. மதுக் கொடுமை இல்லாத, கனிமவளக் கொள்ளை இல்லாத, அரசு வேலைகளில் ஊழலற்ற நேர்மையான நிர்வாகமே எங்களது கொள்கை," என்று அவர் கூறினார். மேலும், 100 நாள் வேலைத் திட்டத்திற்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்து ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## தூத்துக்குடியில் நடைபெற்ற என் கனவு என் எதிர்காலம் பல்வேறு திட்டங்களின் கீழ் 2,747 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்



விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற என் கனவு என் எதிர்காலம்என்றஇணையதளத்தைதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கிவைத்தார். இதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமை வகித்தார். மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சண்முகையா எம்–எல்ஏ, மாநகராட்சி ஆணையர் சி.ப்ரியங்கா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைஅமைச்சர் கீதாஜீவன் கலந்துகொண்டு 2,747 பயனாளிகளுக்குநலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் 10 ஆயிரம் முகாம்கள் நிறைவு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வருகை தந்த அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக ஜீலை 15ம்நாள், காமராஜர் பிறந்தநாளன்று முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார். திட்டத்தின் மூலம் மக்கள் அரசு அலுவலகங்களை தேடிச் சென்றதற்கு மாறாக, அனைத்து அரசு உயர் அலுவலர்களும் நம்முடைய பகுதிகளுக்கேவந்து இந்த முகாமினை நடத்தினார்கள். தமிழகம் முழுவதும் 10000 முகாம்கள் நடத்தப்பட்டது. நம்முடைய தூத்துக்குடி மாவட்டத்தில் 270 முகாம்கள் நடத்தப்பட்டது. இம்முகாமில் பெறப்பட்ட அனைத்து மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். கலைஞர் மகளிர்உரிமைத்தொகை வேண்டி விண்ணப்பித்து நிலுவையில் இருந்த பயனாளிகளுக்கும் தற்போது உரிமைத்தொகை வழங்கப்பட்டு விட்டது. மேலும் ஏதேனும் விடுப்பட்ட பயனாளிகள் இருப்பின் அவர்களும் மேல்முறையீடு செய்கிறார்கள். அதேப்போல் சமூகபாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள் ஆகியோர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவுகளை அனைவரும் குறுஞ்செய்தியாக பெற்றிருப்பீர்கள். 10ம்தேதி உங்களுடைய வங்கிகணக்கில் இந்த மாதத்திலிருந்து ஒவ்வொருமாதமும் வரவு வைக்கப்படும். அதேப்போல் உங்ககனவைச் சொல்லுங்க என்ற திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மற்றும் சமூகஆர்வலர்கள் உங்கள் இல்லம் தேடிவந்து உங்களைச் சந்தித்து, படிவம் ஒன்று வழங்குகிறார்கள். . மேலும், உலகம் உங்கள் கையில் என்ற திட்டத்தின் கீழ்இரண்டாவது கட்டமாகக ல்லூரியில் இரண்டாமாண்டு பயிலுகின்ற மாணாக்கர்களுக்கும் விரைவில் மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாட்டைகாப்பது, தமிழ்நாட்டுமக்களை காப்பதுஎன்கடமை என்று அல்லும்பகலும் உழைத்து வருகிறார்கள். இந்த உதவித்தொகையை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தஉதவித்தொகையைபெற்று, நல்லமுறையில் பயன்படுத்துங்கள் என்று வாழ்த்துகிறேன் என்று அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

05 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களையும், சமூகநலத்துறை சார்பாக முதலமைச்சரின் இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்புதிட்டத்தில்10 பயனாளிகளுக்கு உதவிகளும், தொழிலாளர் நலத்துறைசார்பாக10பயனாளிகளுக்கும், முதலமைச்சரின் விரிவான மருத்துவகாப்பீட்டு திட்டத்தில் 7 பயனாளிகள் எனமொத்தம் 2747 பயனாளிகளுக்கு அமைச்சர் கீதாஜீவன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மேயர் ஜெகன் பெரியசாமி, எம்.சி.சண்முகையா எம்.எல்,ஏ, ஆணையர் ப்ரியங்கா, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.ரவிச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர் பிரபு, துணைமேயர் ஜெனிட்டா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பென்னட்ஆசீர், மாவட்ட சமூகநல அலுவலா் பிரேமலதா, தாட்கோ மேலாளர் ஜெனிஷிஸ் ஷியா, மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் ஸ்வா்ணலதா, தாசில்தாா்கள் திருமணி ஸ்டாலின், இசக்கி முருகேஸ்வரி, செல்வக்குமாா், வருவாய் ஆய்வாளர்கள் குமரன்,பெருமாள் கோவில் அறங்காவலா் குழு தலைவர் செந்தில்குமாா்,மற்றும் மணி,பிரபாகா், கப்பிக்குளம் பாபு அல்பட் அரசுதுறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

## போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மாநகராட்சி பகுதியில் புதிய சாலைகள் அமைக்கப்பட உள்ளது
### குறைதீர்க்கும் முகாமில் மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்



தூத்துக்குடி மாநகராட்சிசார்பில் ஒவ்வொரு வாரமும் மண்டல வாரியாக அலுவலகத்தில் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. ஸ்டேட் பாங்க் காலணியில் உள்ள வடக்கு மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும்முகாமிற்கு மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. பின்னர் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பகுதியில் பல மாதங்களாக பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகின்றது. இதில் பிறப்பு இறப்பு சான்றிதழ் குடிநீர் இணைப்பு பாதாள சாக்கடை கட்டிட அனுமதி உள்ளிட்ட அடிப்படை பணிகளுக்காக தொடங்கப்பட்ட இந்த பகுதிக்குட்பட்ட மண்டலக் கூட்டத்தில் இங்கு வந்து தான் மனு கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது மாநகராட்சி ஆன்லைனில் புகாா்கள் தொிவித்தாலும் அது சம்பந்தப்பட்ட அலுவலா்கள் உங்கள் இல்லத்திற்கே வந்து அதை சாி செய்து விடுவாா்கள். பொதுமக்களுக்கு எந்த தொந்தரவும் இல்லை. மாநகராட்சி பொருத்தவரைசுகாதாரம் உள்ளிட்ட நிறைய பணிகள் நடைபெற்று வருகிறது 4000 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது 45 வருடமாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் எனது வீட்டை தாண்டிய பின்பு ஒரே பனைமரமாக இருக்கும் ஆனால் தற்போது எட்டையாபுரம் ரோடுதாண்டி குடியிருப்பு பகுதிகள் வந்து கொண்டுள்ளது அதற்கு தகுந்தாப்போல் சில வசதிகள் செய்யப்பட உள்ளது பெரிய சாலைகள் அமைக்கப்படுகிறது ஸ்டேட் பேங்க் காலனி உள்ளிட்ட பகுதிகளில் 60 அடி சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது ஜோதி நகர் முக்கில் இருந்து ஊருக்குள் செல்லும் வகையில்தனியார்பள்ளி உள்ளது அதுவரை சாலைகள் தற்போது அமைக்கப்பட உள்ளது ஏபிசி கல்லூரி அருகில் ஒரு சாலை அமைக்கப்பட உள்ளது தற்போது அந்த சாலை ஐந்து புள்ளி ஐந்து அடியாகத்தான் உள்ளது விரிவாக்கம் செய்யப்பட்டு 12 மீட்டராக சாலை அமைக்கப்பட உள்ளது. இதனால் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். தற்போது அமைக்கப்பட உள்ள சாலைகள் இணைப்பு சாலைகள் எல்லாம் முடிந்த பின்பு ஸ்டேட் பேங்க் காலனி வழியாக 60 அடி சாலையில் கடற்கரை வரை சென்று விடலாம் ரயில்வே கேட் இடதுபுறம் 3 சர்வீஸ் ரோடுகள் அமைக்கப்பட உள்ளது. 40 வருடமாக போடப்படாத சாலைகள் எல்லாம் தற்போது போடப்பட்டு வருகிறது அதன் ரயில்வே பாலம் ஒன்று உள்ளது அதற்கு கீழே கார்கள் செல்லும் வகையில் வண்டி பாதை என்று இருந்தது தற்போது அதை ஆக்கிரமிப்பு முள் செடிகள் எல்லாம் அகற்றப்பட்டுசாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது அந்தப் பணிகள் முடிவடைந்தால் போக்குவரத்து முற்றிலும் குறைந்து விடும். வின்பாஸ்ட்சந்திப்பில் இருந்து சங்கரபேரி லிங் ரோடு வழியாக புதிய பேருந்து நிலையம் வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தபகுதிக்கு என்ன தேவையோ அதற்கு தகுந்தாற் போல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறது

. வடக்கு மண்டலத்தில் உள்ள பிங் பாா்க் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இளைஞா்களின் கோாிக்கையை ஏற்று ஆரோக்கியமான இளைய சமுதாயத்தை உருவாக்க மாநகராட்சி சொந்தமான இடங்களில் உடற்பயிற்சி கூடத்தில் சிறிய பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன. இரண்டு அடி மூன்று அடி நான்கு அடி சாலைகள் எல்லாம்

முழுவதும் போடப்பட்டுள்ளது வரும் காலத்தில் விளை யாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் 2022ம் ஆண்டு கடற்கரை சாலையில் ஸ்கேட்டிங் அமைக்கப்பட்டது அதே போல் ரஹமத் நகரில் புதியதாக ஸ்கேட்டிங் விளையாட்டு அமைக்கப்பட உள்ளது பொதுமக்கள் கேரி பை உள்ளிட்ட பிளாஸ்டிக் பொருட்களை மாநகரில் நாம் பயன்படுத்தக் கூடாது முற்றிலும் ஒழிக்க பட வேண்டும் தற்போது ஆரம்பித்தால் ஒருவருடத்திற்குள் மாநகரில் கேரிப்பையை ஒழித்து விடலாம் தூத்துக்குடி மாநகரில் முற்றிலும் கேரி பை ஒழித்து விடலாம். 10 செமீ மழை இனி வரும் காலங்களில் பெய்தாலும் இரண்டு மணி நேரத்தில் முற்றிலும் தண்ணீர் வழிந்தோடி விடும் தூத்துக்குடி மாநகராட்சியை பொறுத்தவரை முன்உதாரணமாக கட்டமைப்பில் சிறந்த மாநகராட்சியாக வளர்ந்து வருகிறது. பொதுமக்கள் செய்ய வேண்டியதெல்லாம் குப்பைகளைதரம்பிரித்து கொடுக்க வேண்டும் என்று பேசினாா்.

நிகழ்ச்சியில் உதவி ஆணையா் பொறுப்பு முனீர்அகமது, நகரமைப்புதிட்ட உதவி செயற்பொறியளர் ராஜேஷ்கண்ணா, நகர்நல அலுவலர் சரோஜா, இளநிலை பொறியாளா் அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர்கள் ராஜசேகா், கண்ணன், மாநகராட்சி கணக்கு குழு தலைவர் ரெங்கசாமி, கவுன்சிலர்கள் காந்திமதி, சுப்நாகேஸ்வாி, அந்தோணி பிரகாஷ் மாா்ஷலின், ஜெயசீலி, பவாணி, ஜெபஸ்டின் சுதா, தெய்வேந்திரன், கற்பகக்கனி, போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகா், ஜேஸ்பா்,மாநகர்மாவட்ட காங்கிரஸ் மண்டலத்தலைவர் சேகா், மேயாின் நோ்முக உதவியாளர் ரமேஷ், உள்பட பொதுமக்கள் அலுவலா்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் 15 வது நந்தாவின் படைப்பாற்றல்26 கண்காட்சி



ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களின் சிறந்த படைப்பாற்றல்களை வெளிக்கொணரும் வகையிலும், ஊக்குவிக்கும் வகையிலும் இரண்டு நாட்கள் கொண்ட 15வது மாணவர்களின் படைப்பாற்றல் (05 மற்றும் 06 பிப்ரவரி 2026) கண்காட்சியின் துவக்க விழா நந்தா தொழில்நுட்ப வளாகத்தில் இனிதே நடைபெற்றது.

இத்துவக்கவிழாவிற்கு, ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் தலைமை தாங்கினார். இக்கண்காட்சியை சென்னையில் செயல்பட்டு வரும் பி. என்.ஒய் மிலோன் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் வித்யா துரை, நேஷனல் ஆக்ரோ பவுண்டேஷன் நிறுவனத்தின் முதன்மைகண்காணிப்பு அலுவலர் முனைவர்எம்.ஆர்.ராமசுப்பிரமணியன் மற்றும் சி.ஜி. பவுண்டேஷன் நிறுவனத்தின் முனைவர் எஸ். தருண்யா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் படைபாற்றல் அடங்கிய ஏனைய கண்காட்சி பகுதிகளை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்கள்.

இக்கண்காட்சியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் மருத்துவம், அறிவியல், பொறியியல் சார்ந்த 1439–க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகள் இடம்பெற்றன. மேலும், இக்கண்காட்சியில் நந்தா கல்வி சார்பு நிறுவனங்களைச் சார்ந்த பொறியியல், சித்தா, இயற்கை மற்றும் யோகா, மருந்தியல், செவிலியர், இயன்முறை மருத்துவம்.கலை அறிவியல் மற்றும் பள்ளி மாணவர்களின் கண்டுபிடிப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

உருளைகிழங்கு அறுவடை வடிவமைப்பு மற்றும் பயன்பாடு,ஐ.ஒ.டி அடிப்படையில் சிலை திருட்டு கண்டறிதல் மற்றும் எச்சரிக்கை அமைப்பு, அவசரகால உயிர் காக்கும் சாதனம், ஒருங்கிணைந்த ஹைட்ரோனிக் விவசாயமுறை, ரோபோட்டிக் உதவியுடன் அறுவை பித்தப்பை கற்களை அகற்றுதல் சிகிச்சையின்றி சிறுநீரகம், பார்வையற்றோர்க்கான ஸ்மார்ட் கண்–கண்ணாடி, ஸ்மார்ட் சிட்டி கழிவு லோண்மை,பெண்கள் பாதுகாப்பு சாதனம்

போன்ற 143 க்கும் மேற்பட்ட தனித்துவம் வாய்ந்த படைப்புகளும் அடங்கும். மாணவர்களின்

இவ்விழாவில், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர்எஸ்.திருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். முதல் நாளான நேற்று, ஈரோடு மாவட்ட பள்ளிகளிலிருந்து சுமார் 520 க்கும் மேற்பட்ட மாணவர்களும்,நந்தாகல்வி நிறுவனங்களில்பயின்று வரும் மாணவர்கள் மற்றும் பொது மக்கள், அவர்தம் பிள்ளைகள் உட்பட சுமார் 7000 க்கும் மேற்பட்டோரும் இக்கண்காட்சியை பார்வையிட்டு சென்றார்கள் என்கிற செய்தினைநந்தாபொறியியல் கல்லூரியின் புதிய படைப்புகள் முன்னேற்ற மையத்தின் தலைவர் புலமுதல்வர் எம்.ஈஸ்வரமூர்த்தி தெரிவித்தார். இரண்டாம் நாளன்று இன்று (06 பிப்ரவரி 2026) மதியம், டெக்னாலஜி தியேட்டர், ஐடியா ப்ரஸன்டேஷன் மற்றும் ப்ராஜக்ட் ப்ரஸன்டேஷன் ஆகிய வகைகளில் சிறந்த படைப்புகளை தேர்ந்தேடுத்து அதனை உருவாக்கிய இளம் விஞ்ஞானிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட இருப்பதாக ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தனது தலைமை உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக ஒருங்கிணைந்து செயல்புரிந்த நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் யு.எஸ்.ரகுபதி, தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் எஸ்.நந்தகோபால் மற்றும் நந்தாபாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் ஜீ. மோகன்குமார் உட்பட ஏனைய நந்தா கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நந்தா கல்வி நிறுவனங்களின் அங்கத்தினர்கள் தங்களது வாழ்த்துக்களையும் நன்றினையும் தெரிவித்தார்கள்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.